

சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் நல்லூர் ஊராட்சியில் காந்திநகர் போலஸ் பூத் அருகில் மாபெரும் பொதுகூட்டம் மாவட்ட கழக செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் சிறப்புரையாற்றி ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தலைமை கழக பேச்சாளா முரசொலி மூர்த்தி மற்றும் கழக இளம் பேச்சாளர் கோகுல் ஆகியோர் சிறப்பரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய நிர்வாகிகள ஏ.காசிம் முகம்மது. கே.எம்.துரைவேல், ப.சீனிவாசன், கே.வீரம்மாள், செ.அரசு, இரா. விஜயன், பா.சேகர். பொண் கோதண்டன் மற்றும் மாவட்ட ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளை நிர்வாகிகள, கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனம். இந்நிகழ்ச்சியை நல்லூர் ஊராட்சி கிளை பொறுப்பாளர் வீரபாண்டிநகர் ந.மணிகண்டன் சிறப்பாக ஏற்பாடு செய்தருந்தார்.

## பி.டி.சி.ஜி செல்வராஜ் தலைமை! நே.சிற்றரசு முன்னிலையில்

# தி.மு.க.தொழிலாளர் அணி சார்பில் மேதின விழா கருத்தரங்கம்! தொழிலாளர்களுக்கு நிதி உதவி!

### ஆர்.எஸ்.பாரதி – டி.கே. எஸ்.இளங்கோவன்– அன்பகம் கலை–எஸ். ஆஸ்டின் பங்கேற்பு!

சென்னை, ஏப்:30-

தி.மு.க.தொழிலாளர் அணி சார்பில் மேதின விழா கருத்தரங்கம் மற்றும் நலிவடைந்த தொழிலாளர்களுக்கு நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சி நாளை 1.5.2025 வியாழக்கிழமை காலை 10:30 மணியளவில் காமதேனு திருமண மண்டபம்,அண்ணா சாலை, தேனாம்பேட்டையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு தி.மு.க.தொழிலாளர் அணி செயலாளர் பி. டி.சி. ஜி.செல்வராஜ் தலைமை வகிக்கிறார்.

சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு,பகுதிச் செயலாளர்கள் மா.பா. அன்புதுரை, வினோத் வேலாயுதம், தொழிலாளர் அணி துணைச் செயலாளர்கள் பி.டி.சி.பாலு, முனைவர் க.வரதன், ராஜா குப்புசாமி, மு. ராஜகாந்தம், கொல்லாபுரம் ச. ராஜேந்திரன்,நாகூர் கனி,கார்த்திக்,சம்பத், செந்தில்குமார், கண்ணன்,பாஸ்கர், சிந்தாமணி,வடிவேல், தினகரன், உதயகுமார்,பாஸ்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பெரம்பூர் த. ஆறுமுகம்,பி.டி.சி.எஸ்.ரவி,கே. சசிகுமார் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இம்மாபெரும் கருத்தரங்கில் தொழிலாளர் சமுதாயத்தின் கலங்கரை விளக்கம் கலைஞர் என்ற தலைப்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி உரையாற்றுகிறார்.

தொழிலாளர் சமுதாயத்தின் துணைவன் தலைவர் தளபதி என்ற தலைப்பில் கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் உரையாற்றுகிறார்.

நலிவடைந்த தொழிலாளர்களுக்கு நிதி உதவிகளை கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, கழகத் துணை அமைப்புச் செயலாளர் எஸ். ஆஸ்டின்,கழகத் துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி எம்.எல்.ஏ. ஆகியோர் வழங்குகின்றனர்.

சென்னை மேற்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எம். டி.ஆர்.சாரதி மணிமாறன் நன்றியுரையாற்றுகிறார்.

## தொகுதி நிதியிலிருந்து – பல்லாவரத்தில்

# ரூபாய் 30 லட்சத்தில் 126 சி.சி.டி.வி கண்காணிப்பு கேமராக்கள்!

### பல்லாவரம் இ. கருணாநிதி எம்.எல்.ஏ. மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்!

பல்லாவரம் ஏப்-30

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிதாம்பரம் மாநகராட்சி மண்டலம் -2 உட்பட்ட 16வது வார்டு 17, 19 21 28 ஆகிய வார்டுகளில் பொதுமக்கள் மற்றும் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியர்களின் கோரிக்கையை ஏற்று மக்களின் பாதுகாப்பை கருதி 34 இடங்களில் ரூபாய் 30 லட்சம் மதிப்பீட்டில் 126 கண்காணிப்பு கேமராக்கள் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் கருணாநிதி தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அமைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்.

அதாவது 16 வது வார்டில் தேவி துலுக்கானத்தம்மன் கோயில் தெரு நித்தியா னந்தம் ஆசிரமம் எதிரில் பி எம் சி ஹாஸ்பிட்டல் அருகில் 17வது வார்டில் ராஜீவ் காந்தி நகர் யூனியன் கார்பெட் காலனி இரண்டாவது தெரு செல்லப்பன் தெரு சித்தி விநாயகர் கோவில் தெரு இளங்கோ தெரு அம்பேத்கர் தெரு முருகேசபுரம் லிங்கம் ரைஸ் மில் தெரு 19-வது வார்டில் கணேஷ் நகர் அலமேலு மங்காபுரம் கீழ்கட்டளை 21 வது வார்டில் திருத்தணி நகர் ஆஞ்சநேயர் கோவில் தெரு காந்தி சிலை மருத்துவமன அருகில் அருள்முருகன் நகர் திருமுருகன் நகர் கம்பர் தெரு பல்லவா கார்டன் 28 வது வார்டில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி அருகில் மும்மூர்த்தி நகர் இந்திரா நகர். நியூ காலனி ஆறாவது மெயின் ரோடு நாலாவது மெயின் ரோடு என 34 இடங்களில் தெருக்களில் நடக்கும் வழிப்பறி குற்ற சம்பவங்கள் பயத்தினால் உள்ள பொதுமக்கள் நலன் கருதி பொதுமக்கள் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர் காவல்துறையினர் ஆகியோர்களின் கோரிக்கையை ஏற்று பல்லாவரம் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 30 லட்சம் மதிப்பீட்டில் 126 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப் பட்டுபல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி ஒவ்வொரு பகுதியாக சென்று மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் பொதுமக்கள் காவல் துறை அதிகாரிகள் அவர்கள் முன்னிலையில் கண்காணிப்பு கேமராக்களை மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார் உடன் மாமன்ற உறுப்பினர்கள் எஸ்.நெடுஞ்செழியன் கலைச்செல்வி வெங்கடேசன் பிருந்தா தேவி சிலம்பரசன் சி. விஜயலட்சுமி கோ ஜானகிராமன் க. ரமேஷ் ச.சிவக்குமார் டி. எஸ். பிரான்சிஸ் பால் பி. வெங்கடேசன் வி. என் சிலம்பரசன் காமேஷ் ரங்கநாதன் சரத் வெங்கடேசன் எம். இளவரசன் எல். ஆர். சதீஷ்குமார் கே. தேவராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் ஏராளமான பொதுமக்கள் திரண்டு இருந்தனர்.

## மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்!

# ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதியில் வட்ட வாரியாக தண்ணீர் பந்தல் திறப்பு!

### டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. – ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பங்கேற்பு! இரா.லட்சுமணன் அறிக்கை!

சென்னை, ஏப்.30-

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா. லட்சுமணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுத்தலின் படி கோடை வெயிலில் பொதுமக்களின் தாகத்தை தணிக்க சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதியில் பகுதி செயலாளர் தலைமையில் வட்டவாரியாக

39, 39அ, 40, 40அ, 42, 42அ, 43, 43அ ஆகிய வட்டங்களில் (01.05 2025) வியாழக்கிழமை) நாளை காலை 10 மணிக்கு கீழ்க் கண்ட இடங்களில் நீர் மோர் தண்ணீர் பந்தல் திறக்கப்பட உள்ளது.

1. தலைமை: பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன் இடம்: காலரா மருத்துவமனை எதிரில் நடைபெறுகிறது.

2. தலைமை: என்.எம். கதிரேசன் 39வது வட்ட செயலாளர் இடம்: கிராஸ் ரோடு பார்க் அருகில் நடைபெறுகிறது.

3. தலைமை : 39(அ) வட்ட செயலாளர் தா.வ.மு. கஜேந்திரன் இடம்: தமிழ் நாடு தியேட்டர் அருகில்

4. தலைமை 40வது வட்டச் செயலாளர் நா. கோதண்டன் இடம் : ஏ.இ.கோயில் திடல், புது வண்ணாரப்பேட்டை மெட்ரோ அருகில்

5. தலைமை 40(அ) வட்ட செயலாளர்மா.நாகராஜன் இடம் : வ.உ.சி.நகர் ஐந்து லைட்டு அருகில்

6. தலைமை 42வது வட்டச் செயலாளர் ப.குமார் இடம் : எச்3 காவல் நிலையம் அருகில்

7. தலைமை 42(அ) வட்டச் செயலாளர் ச.தமிழ்ச் செல்வன் இடம் : தபால் நிலையம் அண்ணா சிலை அருகில்

8. தலைமை 43வது வட்டம் பொ.து.ராஜா இடம்: ஜீவரத்தினம் சாலை

9. தலைமை 43(அ) வட்டச் செயலாளர் ஜெ. பிரேம்ஆனந்த் இடம் : பாலகிருஷ்ணன் தெரு.

இந்நிகழ்ச்சிகளில் எஸ். ஜெபதாஸ் பாண்டியன், கே.வி.லோகேஷ், என். மருதுகணேஷ், ஆர்.வெற்றிவீரன், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி. சதீஷ்குமார், டி.வி.முத்துகிருஷ்ணன், கு.நற்குனம், தா.தமிழக்கொடி வெ.சு. சத்யநாராயணன், இர.பொன் இளவரசன், வி.வி.ரமேஷ், சி.மணிகண்டன், ஏ.ரமேஷ்பாபு, எம். எம்.சாமி, பி.கே.மூர்த்தி, ஆர்.ரமேஷ், கே.மோகன், ஜெ.சுரேஷ்பாபு, பி.அன்பழகன், டி.ஆர்.தணிகாசலம், சா.திருப்பதிசாமி, வி.முத்து, மா.ரூபசங்கர், தேவி கதிரேசன் எம்.சி, குமாரிநாகராஜன் எம்.சி, பவித்ராநரேஷ் குமார் எம்.சி, சே. ஹரிஷ்குமார், ஏ.வெங்கடேஷ், ராஜேஸ்வரி, எஸ்.சேகர் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் அனைத்து அணிகளின் பகுதி துணை அமைப்பாளர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் பிஎல்ஏ2 பாக முகவர்கள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கிழக்குப் பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் தெரிவித்துள்ளார்.



சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி இளைஞரணி சார்பில் தண்ணீர் பந்தலை பகுதி அமைப்பாளர் சீ.வி.திவான் குமார் தலைமையில் 123 அ வட்டத்தில் பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன் மற்றும் மாவட்டத் துணை அமைப்பாளர் தினேஷ் மாணிக்கம் திறந்து வைத்தனர். இதில் வட்டச் செயலாளர்கள் மூ.ராஜேந்திரன், டி.ராஜவேலு மு.இ.ஏழுமலை, எஸ்.ஆர்.ராஜா, சுரேஷ்குமார், சீ.கிருஷ்ணமூர்த்தி, பகுதி துணை அமைப்பாளர்கள் ந.உதயன், ராஜேஷ் குமார், இளைய குமார், அரவிந்த் ரமேஷ் லோகேஷ் எஸ்.வி.மணிகண்டன் பா.மணிகண்டன், கோ.ரஞ்சித் சதிஷ், பாலாஜி, மணி, ராகேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கடுமையான நிதி நெருக்கடியிலும்

# ஆசிரியர் - அரசு ஊழியர்களின் கோரிக்கையை நிறைவேற்றிய முதல்வருக்கு நன்றி!

### தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் கு. தியாகராஜன் அறிக்கை!

சென்னை, ஏப். 30-

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில தலைவர் கு.தியாகராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;



“நான் செய்யாமல் யார் செய்வது?” என்று அன்புடன் சொல்லி வந்த முதலமைச்சர் இன்று பெரும்பாலானவற்றை செய்துள்ளார் கடுமையான நிதி நெருக்கடியிலும் ஆசிரியர் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிய தமிழக முதலமைச்சருக்கு நன்றி. அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நலனில் என்றும் அக்கறை உள்ளவராக டாக்டர் கலைஞர் இருந்து வந்தார்.

2003 ஆம் ஆண்டு எஸ்மா டெஸ்மா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்களின் தண்டனைகள் அனைத்தையும் ரத்து செய்ததோடு,ஒரு லட்சத்து எழுபத்து மூன்றாயிரம் பணி வாய்ப்பினை மீண்டும் வழங்கிய தோடு மட்டுமல்லாமல் 2004 ஆம் ஆண்டு தொகுப்பூதிய முறையில் நியமனம் செய்யப்பட்ட 53000 ஆசிரியர்களை கடந்த 2006 ஆம் ஆண்டு தி.மு.க.அரசு அமைந்த முதல் நாளே கையொப்பமிட்டு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் பாதுகாவலன் என்பதை கலைஞர் அவர்கள் நிரூபித்தார்.

2006 ஆம் ஆண்டு ஆறாவது ஊதியக்குழுவின் பயன்களை 31.5.2009 வரை நியமிக்கப்பட்ட அனைவரும் பயன்பெறும் வகையில் நீட்டிப்புச்செய்து அதற்கான ஆணையை அந்நாளைய துணை முதல்வரான இன்றைய முதலமைச்சர் உத்தரவிட்டதை நாங்கள் என்றும் மறக்க வில்லை.

ஆசிரியர்களுக்கு மட்டுமின்றி மாணவர்களுக்கு சத்துணவில் வழங்கப்பட்ட முட்டை, கிராமப்புற மாணவர்களும் கல்வி கற்க வேண்டும் என்று நோக்கத்தோடு இலவச பயண அட்டை, அரசுப் பள்ளியில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் கல்வி கட்டணம் ரத்து, அனைத்து அரசு பள்ளிகளிலும் உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள், அரசு பள்ளிகளின் தரத்தை உயர்த்திட மாணவர்களின் நிலையை உயர்த்திட எதிர்காலத்தை ஒளிமயமாக்கிட ஏராளமான திட்டங்கள்.

உயர்கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையில் தமிழ்நாடு முன்னோடி என அளப்பரிய சாதனை புரிந்து வரும் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்றென்றும் நன்றி உடையவர்களாக இருந்து வருகிறோம்.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் கல்வித்துறையை சீரழிக்க வேண்டும் என்ற நோக்கோடு புதிய கல்விக் கொள்கையை ஏற்றால்தான் நிதியை வழங்க முடியும் என்று தற்காலிக ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க முடியாத நிலையிலும் மாநில நிதியிலிருந்து தடையின்றி ஊதியம் வழங்கியது.

பள்ளிக்கல்வித்துறைக்கு ஒதுக்க வேண்டிய நிதி தடைபட்ட போதும் இதுநாள்வரை எந்த பணியிடங்களுக்கும் ஊதிய தட்டுப்பாடின்றி ஊதியம் வழங்கிட சிரத்தையுடன் பணியாற்றும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றிக்கடன்பட்டிருக்கிறோம்.

இன்று சட்டப்பேரவையில் ஆசிரியர்களின் நீண்ட கால கோரிக்கையான பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப் படுத்திடும் நோக்கத்தோடு அமைக்கப்பட்ட குழுவின் காலக்கெடுவை செப்டம்பர் மாதமாக குறைத்திருப்பது, ஓய்வூதியம் சார்ந்த ஒரு நல்ல முடிவை திராவிட மாடல் அரசு எடுக்கும் என்ற நம்பிக்கையை தருவதாக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு இருக்கிறது.

இந்த நிதி நெருக்கடியான சூழலிலும் ஒன்பது முத்தான அறிவிப்புகளை அரசு ஊழியர்களுக்கு ஆசிரியர்களுக்கு அறிவித்திருப்பதன் மூலமாக இந்த அரசுதான் என்றும் ஆசிரியர் அரசு ஊழியரின் நலனில் அக்கறை கொண்டது என்பதை மீண்டும் ஒருமுறை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிரூபித்திருக்கிறார்.

ஈட்டிய விடுப்பு சரண் செய்யும் காலத்தை 2025 அக்டோபர் மாதம் முதலாக வழங்குவதாக அறிவித்திருப்பதும், அரசு ஊழியர் ஆசிரியர்களின் பிள்ளை களின் திருமணத்திற்கு ரூபாய் 5 லட்சம் முன்பணம் வழங்குவதற்கான அறிவிப்பும், பெண் ஆசிரியர்களுக்கு பேறுகால விடுப்பின் போது தகுதி காண் பருவத்தில் அந்தக் காலம் கழிக்கப்படும் நிலை இருந்தது அதனை மாற்றியமைத்து இருப்பது ஒட்டுமொத்த பெண் ஊழியர்களுக்கும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

பண்டிகை முன்பணத்தை 10 ஆயிரத்திலிருந்து இருபதாயிரம் ஆக மாற்றியிருப்பது பண்டிகை காலத்தில் மிகுந்த பயன் அளிக்கக்கூடிய நிதி உதவியாக இருக்கும்.

இவ்வாறு ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களின் எண்ண ஓட்டத்தை அறிந்து பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்த அறிவிப்புகளை வெளியிட்டிருப்பதோடு, நிர்வாக ரீதியிலான பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தி இருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்பு ஒட்டுமொத்த அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு மகிழ்ச்சியை தரக்கூடியதாகவும் நம்பிக்கையை வளர்ப்பதாகவும் இருக்கிறது.

ஒன்றிய அரசின் வஞ்சகம், கடந்த ஆட்சியால் ஏற்பட்ட நிதி சுமை, கொரோனா பேரிடர் காலத்தில் ஏற்பட்ட நிதி சுமை இவற்றையெல்லாம் கடந்து இன்று ஆசிரியர் அரசு ஊழியர்களுக்கு 9 முத்தான கோரிக்கைகளை அறிவித்து எங்கள் நெஞ்சமெல்லாம் வாழ்ந்து கொண்டி ருக்கும் எங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு எங்களின் கோடான கோடி! நன்றி! நன்றி!

இதுவரை பெற்ற அனைத்தும் இனிமேல் பெறப்போகும் அத்தனையும் திமுக ஆட்சி காலத்திலேயே சொன்னதை செய்பவர் ஏன் சொல்லாததையும் செய்பவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடந்த கால வரலாறுகள் அதை நிரூபித்திருக்கிறது. இந்தியாவின் ஒட்டுமொத்த முதல்வர்களில் தன்னிகரில்லா தனித்துவமான முதலமைச்சர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்றும் பக்கபலமாய் இருப்போம்.

இவ்வாறு கு.தியாக ராஜன் தெரிவித்துள்ளார்.



வேளச்சேரி மேற்கு பகுதி 177வது வார்டில் காந்தி சாலையில் ஆதிதிராவிடநலக்குழு மாவட்ட துணை அமைப்பாளர் க.பத்மராஜன் ஏற்பாட்டில் நீர் மோர் பந்தலை கழக மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் வேளச்சேரி பெ.மணிமாறன் திறந்து வைத்து பொதுமக்களுக்கு மோர், பழரசம் வழங்கினார். இந்நிகழ்வில் ஆதிதிராவிடநலக்குழு மாவட்ட அமைப்பாளர் அடையார் சி.சுரேஷ் உள்ளிட்ட கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

